**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம்,**

**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

அ.வ.எண். 48/2020

நாள் : 29.07.2026

பி.வா.சா.1 – கற்பகவள்ளி (2 ம் பிரதிவாதி)

__முதல் விசாரணை தொடர்ச்சி-__

1. 29-04-2008 தேதியிட்ட 1ம் பிரதிவாதி மேற்படி புல எண். 1011/9B-ல் கண்ட வடபக்கம் செண்டு 17. 1/2-ல் 4 செண்டு நிலத்தினை பாலமுருகன் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் - கணிணி நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகவும்,
2. 29-10-2018 தேதியிட்ட குருவம்மாள் தனது மகன் வயிற்றுப்பேரனான உதயக்குமாரருக்கு எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் - கணிணி நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகவும்,
3. 29-10-2018 தேதியிட்ட காந்திமதி, உதயக்குமாரருக்கு எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் - கணிணி நகல் **பி.வா.சா.ஆ.3** ஆகவும்,
4. 30-05-2019 தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு - கணிணி நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகவும்,
5. 18-08-2020 தேதியிட்ட உதயகுமார் அவர்களிடமிருந்து 2ம் பிரதிவாதி கற்பகவள்ளி கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் - கணிணி நகல் **பி.வா.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

__வாதி தரப்பில் குறுக்கு விசாரணை__

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் எண் 1
திருவில்லிபுத்தூர்.